

திருமயம் சட்டமன்றத் தொகுதி அரிமளம் ஒன்றியம் ராயவரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் தேர்திருவிழாவை முன்னிட்டு நகரத்தார்கள் வாசுகிபுரம் கிராமத்தினர் மற்றும் ராயவரம் ஊர் பொது மக்கள் சிங்கப்பூர் வாழ் வாசுகிபுரம் இளைஞர்கள் மற்றும் சுதந்திரப் பறவை கபாடிக்குழு இணைத்து நடத்தும் 50ம் ஆண்டு மின்னொளி கபாடி போட்டியினை புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், திருமயம் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் எஸ். ரகுபதி துவக்கி வைத்தார்.

# சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து!

## ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

ஈரோடு, மே 21-

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் மாவட்ட அவைதலைவர் கே.குமார் முருகேஸ் தலைமையில் மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணிக்கு வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கு இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

அனைத்து மாவட்டங்களிலும் மக்களோடு மக்களாக இணைந்து தேர்தல் பிரச்சாரம் செய்த கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கும் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மற்றும் தோழமைக் கட்சி தலைவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தேர்தலில் கடுமையாக பணியாற்றிய நிர்வாகிகள் கழகத் தோழர்கள் மற்றும் தோழமைக் கட்சி தலைவர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தேர்தல் முடிவுகள் வந்த பின் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்தாலும் அன்றைக்கே மக்களை சந்தித்து நன்றியும் ஆறுதலையும் தெரிவித்து ஒட்டு மொத்த தமிழ்நாடும் நன்றியுடன் நினைத்து பார்க்க வைத்தும் சோர்வுள்ள கழகத் தோழர்களை மீண்டும் வீறு கொண்டு பணியாற்றும் விதத்தில் செயல்பட்ட கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்று சட்டப்பேரவையின் முதல் கூட்டத்திலேயே மிகச் சிறப்பாக உரையாற்றி சிறந்த எதிர்க்கட்சித் தலைவர் என்று பெயரெடுத்த திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

சட்டமன்ற தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும் மாவட்டச் செயலாளர் கூட்டத்தைக் கூட்டி தோல்விக்கு நானே பொறுப் பேற்று கொள்கிறேன் என்று தலைமைப் பண்புக்கு மரியாதை ஏற்படுத்திக் கொடுத்த கழக தலைவர் தளபதி அவர்களுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியையும் , வரவேற்பையும் தெரிவித்துக் கொள்கிறது.

மேற்கண்ட ஆய்வு கூட்டம் வரும் 21.5.2026 வியாழக்கிழமை அன்று ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கும், 22.5.2026 வெள்ளிக்கிழமை அன்று ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதிக்கும் ஈரோடு மணல்மேடு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்திலும் 23.5.2026 சனிக்கிழமை அன்று மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்கான கூட்டம் மொடக்குறிச்சி உதயம் அன்பகம் இளைஞரணி அலுவலகத்திலும் நடைபெற உள்ளது. ஒவ்வொரு கூட்டமும் அந்தந்த தேதியில் காலை 9 மணிக்கு தொடங்கும். எனவே கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகளையும் கருத்துகளையும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கடந்த ஐந்தாண்டு ஆட்சியில் ஈரோடு மாவட்டத்திற்கு எண்ணற்ற திட்டங்களையும், ஆயிரகணக்கான மக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் கொடுத்ததோடு, நீண்ட காலமாக நிலுவையில் கிடந்த பல்வேறு பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு கொடுத்த அன்றைய முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.





நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில்,கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் நடந்து முடிந்த தேர்தலின் போது தேர்தலில் பணியாற்றிய அனைத்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவித்தார். இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வு மேற்கொள்ள தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள மகளிர் தொண்டர் அணி மாநில துணைச் செயலாளர் திருமதி.மாலதி நாகராஜ், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் சி.ஆனந்தகுமார் ஆகியோர்கள் தஞ்சை வடக்கு மாவட்ட சட்டமன்ற தொகுதிகளில் தொகுதி வாரியாக கீழ் கண்டவாறு ஆய்வு மேற்கொள்ள உள்ளனர் என்று மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் தெரிவித்துள்ளார்.

**31.05.2026 ஞாயிற்றுக்கிழமை** - காலை 09:00 முதல் கும்பகோணம் ராயா திருமண மண்டபம், காந்தியடிகள் சாலை, கும்பகோணம்.

**01.06.2026 திங்கட்கிழமை** - காலை 09:00 முதல் திருவிடைமருதூர் ராயல் திருமண மண்டபம் ஆடுதுறை.

**02.06.2026 செவ்வாய்க்கிழமை** - காலை 09:00 - முதல் பாபநாசம் மங்களம் மஹால் திருக்கருகாவூர்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 20.05.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

தஞ்சை மத்திய மாவட்டத்தில் உள்ள 173 திருவையாறு, 174 தஞ்சாவூர், 175 ஒரத்தநாடு ஆகிய தொகுதிகளில் கள ஆய்வுக்கூட்டம் திருமதி.மாலதி நாகராஜ் (மாநில மகளிர் அணி துணைச்செயலாளர்), சி.ஆனந்தகுமார் (மாநில இளைஞர் அணி துணைச்செயலாளர்) ஆகியோர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து களஆய்வு நடைபெறுகின்றது என்று மாவட்டச் செயலாளர் துரை சந்திரசேகர் தெரிவித்துள்ளார்..

**தஞ்சாவூர் தொகுதி**
24.05.2026 ஞாயிறு
காலை 08.00 மணி
தஞ்சை ஜெயராம் திருமண மஹால்,

**ஒரத்தநாடு தொகுதி**
25.05.2026 திங்கள்
காலை 08.00 மணி
ஒரத்தநாடு முத்தமிழ் அரங்கம்,

**திருவையாறு தொகுதி**
26.05.2026 செவ்வாய்
காலை 08.00 மணி
திருக்காட்டுப்பள்ளி R.A திருமண மண்டபம்,

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 20.05.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தே.மதியழகன் அறிக்கையின் படி ஊத்தங்கரை, பர்கூர், கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிகளில் கள ஆய்வுக்குழுக் கூட்டம் **சி.என்.அண்ணாதுரை எம்.பி.**, **திருமதி ரத்னா லோகேஸ்வரன்** ஆகியோர் தலைமையில் கீழ்க்கண்டவாறு நடைபெறவுள்ளது.

| வ.எண் | சட்டமன்றத் தொகுதி | நாள் | இடம் |
|---|---|---|---|
| 1. | ஊத்தங்கரை | 25.05.2026 திங்கட்கிழமை | நாயுடு மஹால் கிருஷ்ணகிரி மெயின் ரோடு, ஊத்தங்கரை |
| 2. | பர்கூர் | 26.05.2026 செவ்வாய்க்கிழமை | டி.ஆர்.திருமண மண்டபம், பர்கூர் |
| 3 | கிருஷ்ணகிரி | 27.05.2026 புதன் கிழமை | எம்.ஜி.எம். மஹால் அவதானப்பட்டி, கிருஷ்ணகிரி |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 19.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# காரைக்குடி இராம. சுப்பையா

## மே 21 (1997)



சுயமரியாதை இயக்கத் தொண்டர். கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்து உறுப்பினர். வைதீகக் கோட்டையான காரைக்குடிப் பகுதியில் திராவிட இயக்கத்தைப் பரப்பியவர்.

1953ஆம் ஆண்டு நடைபெற்ற கல்லக்குடிப் போராட்டத்தில் இரண்டாம் அணியின் தலைவராகப் பொறுப்பேற்று, இரயில் மறியல் செய்து, கைதாகி, தலைவர் கலைஞர் அவர்களுடன் திருச்சி சிறை புகுந்தவர்.

1972ஆம் ஆண்டு முதல் ஆறாண்டு காலம் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக பணியாற்றியவர்.

90 வயது வரை சுயமரியாதைக்காரராகவும், தி.மு.கழகத்தின் தொண்டராகவும் வாழ்ந்து மறைந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

பத்திரிகையாளர் மீது கொடூரத் தாக்குதல்

# தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர் யூனியன் கண்டனம்!

## யூனியன் மாநில தலைவர் மு.சிவதமிழவன் கண்டன அறிக்கை!

திருவாரூர்,மே21-

தமிழ்நாட்டின் முதல்வராக ஜோசப்விஜய் அவர்கள் பதவியேற்று சில நாட்களுக்குள்ளாகவே, பத்திரிகையாளர் மீது நள்ளிரவில் நடைபெற்றிருக்கும் கொடூரதாக்குதல் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளாதகவும் , ஜனநாயகத்தின் ஒரு தூணாக விளங்கும் பத்திரிகை மற்றும் ஊடக துறையினர் அச்சமின்றி பணியாற்றிட அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர் யூனியன் மாநில தலைவர் மு.சிவதமிழவன் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மாநில தலைவர் மு.சிவதமிழவன் தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது,

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் ஹாஜா முகைதீன் என்பவரை, நள்ளிரவில் ரவுடி கும்பலை சேர்ந்த மூவர் வீடுபுகுந்து தாக்குதல் நடத்தி இருப்பது கண்டனத்திற்குறியது. தாக்குதலில் பாதிக்கப்பட்ட செய்தியாளர் தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

உயிருக்கு போராடும் வகையில் தாக்கி காயப்படுத்திய ரவுடி கும்பலை கைது செய்ய கடும் நடவடிக்கை எடுக்க தமிழக முதலைமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் திருவாரூர் மாவட்ட காவல்துறைக்கு உத்தரவிடவேண்டும் , சிகிச்சையில் இருக்கும் செய்தியாளருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அரசு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் . மேலும் பத்திரிகை மற்றும் ஊடக துறையினர் வரும் காலங்களில் அச்சமின்றி பணியாற்றிட அரசு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக சட்டப்படி மேற்கொள்ள வேண்டும். இந்த கொடூர தாக்குதலுக்கு உரிய நியாயம் கிடைக்க தவறும்பட்சத்தில் எங்கள் யூனியன் சார்பில் போராட்டங்கள் நடத்தவும் தயாராக உள்ளோம்.

இவ்வாறு தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர் யூனியன் மாநில தலைவர் மு.சிவதமிழவன் அவர்கள் தமது அறிக்கையில் கூறி இருக்கிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஆ. நெடுஞ்செழியன்

## மே 21 (2001)



சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் மூத்த மகனான இவர், சேலம் நகர இளைஞர் அணி அமைப்பாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் திறம்பட பணியாற்றி, மறைவெய்தியபோது சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றியவர்.

சேலம் மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட பால்வள இயக்குநர் ஆகிய பொறுப்புக்களை வகித்தவர்.

கழகம் எதிர்க்கட்சியாக இருந்த காலங்களில் நடைபெற்ற போராட்டங்கள் பலவற்றிலும் முன்னணியில் நின்று கழகத்தினரை வழிநடத்தி, அவர்களுடன் சிறை சென்றவர்.

“கழகக் காளை ஆ.நெடுஞ்செழியன் மறைந்துவிட்டார் என்ற இடி போன்ற செய்தியினைக் கேட்டு என்னைத் தேற்றிக் கொள்ள இயலாமல், என் தம்பியையும் தேற்றிட இயலாமல் தவிக்கிறேன். தம்பி செழியா, என்றும் வாழும் உன் புகழ்!” என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**